JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W - 6 |
| NAME | : | ரமேஷ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் சமோசா கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். சாட்சி முருக அரசன் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 29.05.2019 ம் தேதி மைதானம் அருகே நானும் முருக அரசனும் நின்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 4.15 மணியளவில் பாவூர்சத்திரம் போலிசார் அந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் முருக அரசனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 4 ஆக குறியிடு செய்யப்படுகிறது. அருவாள் இருந்தது அதை போலிசார் கைப்பற்றினார்கள். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 5 ஆக குறியிடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாள் தான் போலிசார் அங்கிருந்து எடுத்த அருவாள். (அந்த அருவாள் எற்கனவே அசாபொ 1 ஆக குறியிடு செய்யபட்டுள்ளது). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - ரமேஷ்

| |
|---|
| Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.<br><br>//Sd//- Tr.M.Ponpandi<br>Judicial Magistrate,<br>Tenkasi |

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W - 5 |
| NAME | : | முருகஅசரன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் மிட்டாய் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி ரமேஷ் என்பவரை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். 29.05.2019 ம் தேதி சாமி நாடார் தெரு மைதானம் அருகே நானும் ரமேஷ் ம் நின்று கொண்டிருந்தபோது மாலை சுமார் 4.15 மணியளவில் பாவூர்சத்திரம் போலிசார் அந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் ரமேஷ் ம் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அசாஆ 2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. சுமார் மாலை 4.45 மணியளவில் அந்த இடத்தில் இருந்து போலிசார் எடுத்தார்கள். அத்தாட்சி அசாஆ 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாள் தான் போலிசார் அங்கிருந்து எடுத்த அருவாள். (அந்த அருவாள் எற்கனவே அசாபொ 1 ஆக குறியிடு செய்யபட்டுள்ளது). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.**

//Sd// - முருக அரசன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W - 4 |
| NAME | : | ஜெயராணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

முதல் விசாரணை

நான் திருமணமாகி தற்போது அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிறந்த ஊர் கீழப்பாவூர். நான் சத்தியா மொபைல் கடையில் வேலை செய்து வருகிறேன். அசா1 ஆறுமுக பாண்டி எனது தந்தை. , அசா2 பூபதி எனது அம்மா. அசா3 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.05.2019 ம் தேதி மாலை 3.10 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது சப்தம் கேட்டு வெளியே வந்த போது ஆஜர் எதிரி எனது அம்மாவை தேவிடியா செறுக்கி என்று ஏசி கொண்டு வலது காது பக்கத்திலும் , வலது தோள் பட்டையிலும் வெட்டினான். நானும் எனதுஅப்பாவும் எனதுஅம்மாவை அரசு மருத்துவமனைக்கு சேர்த்தோம். எனது அப்பா என்னை மருத்துவமனையில் இருக்க சொல்லி விட்டு பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாளால் தான் எனது அம்மாவை ஆஜர் எதிரி வெட்டினார். (அந்த அருவாள் எற்கனவே அசாபொ 1 ஆக குறியிடு செய்யபட்டுள்ளது). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.**

//Sd// - ஜெயராணி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : காளியம்மாள் | |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். அசா1 ஆறுமுக பாண்டி , அசா2 பூபதி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.05.2019 ம் தேதியன்று மாலை 3.00 மணி முதல் 3.10 மணி இருக்கும் போது பூபதி வீட்டின் முன்பு நானும் பூபதியும், சாந்தியும் பீடி சுற்றி கொண்டிருந்த போது ஆஜர் எதிரி அருவாளை கொண்டு வந்து என் தங்கை வாழாமல் இருக்கிறாள் உன் பொண்ணுக்கு என்ன கல்யாணமும் என்று சொல்லி கொல்லாமல்விடமாட்டேன் என்று சொல்லி பூபதியை அருவாளால் தலையின் வலது பக்கம், காது பக்கம், வலது கழுத்து தோள்ப்பட்டை பக்கம் வெட்டினார். தேவியா மகளே என்று அசிங்கமாக பேசி விட்டு கொல்லமல் விடமாட்டேன் என்று சொன்னார். பூபதியின் கணவரும், மகள் ஜெயராணியும் ஓடி வந்தார்கள். பூபதியை மருத்துவமனைக்கு அவரது கணவரும் மகளும் கூட்டி சென்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாளால் தான் பூபதியைஆஜர் எதிரி வெட்டினார். (அந்த அருவாள் எற்கனவே அசாபொ 1ஆக

குறியிடு செய்யபட்டுள்ளது). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - காளியம்மமாள்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : பூபதி | |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

முதல் விசாரணை

நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். அசா1 ஆறுமுக பாண்டி எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.05.2019 ம் தேதி மாலை 3.10 மணியளவில் நானும் காளியம்மாள், சாந்தியும், வீட்டின் முன்பாக பீடி சுற்றி கொண்டிருந்தோம். அப்போது ஆஜர் எதிரி வந்து என் தங்கையே வாழவில்லை. உன் மகளுக்கு என்ன கல்பாணம் என்று சொல்லி தேவியா செறுக்கி என்று சொல்லி எனது சேலை பிடித்து இழுத்து உன்னை கொல்லமல் விடமாட்டேன் என்று சொல்லி அருவாளை வைத்து எனதுவலது காதின் பின் பக்கமும் எனது வலது தோள் பட்டை,யிலும் வெட்டினார். அலறல் சப்தம் கேட்டு எனது மகளும் எனது கணவரும் வீட்டில் இருந்து ஓடி வந்தார்கள். அதற்கு பிறகு என்னை பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். முதலுதவி முடித்து தென்காசி அரசு மருத்துவமனைக் குஅனுப்பி வைத்தார்கள். தென்காசியில் என்னை சேர்த்து விட்டு எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எனக்கு நடமாட பயமாக உள்ளது. தற்போது

நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாளாலால் தான் என்னை ஆஜர் எதிரி வெட்டினார். (அந்த அருவாள் எற்கனவே அசாபொ 1ஆக குறியிடு செய்யபட்டுள்ளது). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - பூபதி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 190 /2020 |
| | : | Prosecution P.W -1 |
| NAME | : | ஆறுமுகபாண்டி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.08.2023

**முதல் விசாரணை**

**நான் தற்போது கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடை வைத்திருந்தேன், தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 29.05.2019 ம் தேதி மாலை 3.10 மணியளவில் நானும் எனது மகள் ஜெயராணியும் என் வீட்டினுள் இருந்தோம். வீட்டின் வெளியே எனதுமனைவி பூபதியும், எனதுஅண்ணி காளியம்மாள், தம்பி மனைவி சாந்தி ஆகியோர்கள் பீடி சுற்றி கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரியின் தங்கையை எனது மகன் சண்முகநாதனுக்கு திருமணம் செய்திருந்தோம், என் தங்கையே இந்த வீட்டில் வாழவில்லை, தேவிடியா முண்ட என்று பேசி கொண்டு கையில் வைத்திருந்த அருவாளால் ஓங்கி எனது மனைவி பூபதியை வலது காது ஓரமாகவும், வலது தோள்பட்டையிலும் வெட்டினார். நானும் எனதுமகளும் அலறல் சப்தம் கேட்டு பார்த்த போது எனது மனைவிக்கு காதில் ரத்தம் வந்தது. நாங்கள் எனது மனைவியை பாவூர்சத்திரம் அரசு**

மருத்துவமனைக்கு ஆட்டோ மூலம் கொண்டு சேர்த்தோம். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் தென்காசி அரசுமருத்துவமனைக்கு வந்தோம். தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து விட்டு மாலை சுமார் 4.10 மணியளவில் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டபப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் என்னிடம் காட்டப்படும் அருவாளாலால் தான் எனது மனைவியை ஆஜர் எதிரி வெட்டினார். அந்த அருவாள் அசாபொ 1 ஆக குறியிடு செய்யபடுகிறது. கொலை செய்து விடுவேன் என்று ஆஜர் எதிரி சொல்லி விட்டு சென்றார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

.குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// -ஆறுமுகபாண்டி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi